**செ. கு. எண்**:269 **நாள்**:30.07.2012

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கல் செய்தி – 30.7.2012

பிரபல குச்சுபுடி நடனக் கலைஞரும், எனது குருவுமான டாக்டர் வேம்பட்டி சின்ன சத்யம் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரமும், ஆழ்ந்த மன வேதனையும் அடைந்தேன்.

குச்சுபுடி நடனத்தை முறைப்படுத்தி, அதில் புதிய நுணுக்கங்களைப் புகுத்தி, அதற்கு சர்வதேச அளவில் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்ததில் முக்கியப் பங்கு வகித்தவர் திரு. வேம்பட்டி சின்னசத்யம் அவர்கள். **1963–**ஆம் ஆண்டு சென்னையில் குச்சிபுடி ஆர்ட் அகடமியைத் துவக்கி, நடனத்திலும், பாடல்களைத் தொகுப்பதிலும் தன்னுடைய கவனத்தை செலுத்தி வந்ததோடு மட்டுமல்லாமல், குச்சுபுடி நடனக் கலைஞர்களை உருவாக்குதிலும், அவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் தனது பெரும்பாலான நேரத்தை செலவழித்தவர் திரு. வேம்பட்டி சின்னசத்யம் அவர்கள். பிரபல முன்னணிக் கலைஞர்களை உருவாக்கிய பெருமையும் இவருக்கு உண்டு. உலகளவில் இன்று குச்சுபுடி நடனம் பிரபலமடைந்ததற்கு இவரது முயற்சியே முக்கியக் காரணமாகும். மத்திய அரசின் பத்மபூஷன் விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது, மத்தியபிரதேச அரசின் காளிதாஸ் புரஸ்கார் விருது உட்பட ஏராளமான விருதுகளுக்குச் சொந்தக்காரர் திரு. வேம்பட்டி சின்னசத்யம் அவர்கள்.

திரு. வேம்பட்டி சின்னசத்யம் அவர்களின் மறைவு நடனத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு மிகப் பெரிய இழப்பு ஆகும். இவருடைய இடத்தை யாராலும் பூர்த்தி செய்ய இயலாது. நாம் ஒரு மிகப் பெரிய நடனக் கலைஞரை இழந்துவிட்டோம்.

திரு. வேம்பட்டி சின்னசத்யம் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**